[2018 ஜூன் 5

126—

ஆரம்ப சுகாதார நிலையம்

***20203—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் தொகுதி, மேல்குந்தா ஊராட்சி, கிண்ணக்கொரை கிராமத்தில் படுக்கை வசதியுடன்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உதகமண்டலம் சட்டமன்றத் தொகுதி, கிண்ணக்கொரை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 10 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும் (Urban Primary Health Centre) *செயல்பட்டு வருவதால், தற்போது அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்தக் கேள்வியை நான் கேட்கிறேன்.*

மிகவும் பின்தங்கிய கிராமமாக இருக்கக்கூடிய கிண்ணக்கொரை கிராமம், மேல்குந்தா ஊராட்சியில் இருக்கிறது. அங்கிருந்து 35 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்தில்தான் மஞ்சூர் கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு சுகாதார நிலையம் இருக்கிறது. இங்கே

2018 ஜூன் 5]

குறிப்பிடப்படும் கிண்ணக்கொரை கிராமத்தில் எந்தவிதமான வசதிகளும் இல்லை. சாலை வசதிகள்கூட இல்லாமல் இருக்கிறது. 35 கிலோ மீட்டர் சென்று மருத்துவம் பார்க்க வேண்டியிருப்பதால் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, தாங்கள் தயவுகூர்ந்து, அதை மறுபரிசீலனை செய்து கிண்ணக்கொரை கிராமத்தில் 30 படுக்கை வசதிகொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்று நிகழ்வாக கடந்த 7 ஆண்டுகளில் 221 கோடி ரூபாய் செலவில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய அந்தப் பகுதி நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைப் பகுதி என்ற காரணத்தால், விதிகளைத் தளர்த்தி, அங்குள்ள மலைவாழ் மக்களின் நலன்கருதி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் செவிலியர் பயிற்சிக் கல்வி பயில சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. நாள் ஒன்றுக்கு சுமார் 2,500 புற நோயாளிகளும், உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்றுவரும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையினை மையமாகக் கொண்டு, இப்பகுதி மாணவ, மாணவியர்களின் நலன்கருதி, சுமார் 50 பேர் பயிலும் வகையில், செவிலியர் பயிற்சிக் கல்லூரி School of Nursing தொடங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மக்கள் நல்வாழ்வுத் துறையால், பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப புதிய மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன, மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்டு, தரம் உயர்த்தப்படுகின்றன. அந்தவகையில்,* Paramedical Courses *என்று சொல்லக்கூடிய செவிலியர் பட்டயப் பயிற்சி,* ANM Course *போன்றவை மட்டுமல்லாமல், மருத்துவம்சாரா பணியாளர்களுக்கான அனைத்து படிப்புகளும் மருத்துவக் கல்வி இயக்குநகரத்தின் சார்பாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை வரும் காலங்களில் நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், அம்மா அவர்களுடைய ஆட்சியை வழிநடத்திக் கொண்டிருக்கும் தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

குன்னூர் தொகுதி, கோத்தகிரி வட்டத்திற்குட்பட்ட சோளூர்மட்டம் பகுதி ஒரு தனி வட்டம் போல காவல் நிலையமும், மேல்நிலைப் பள்ளியும் தனியாக இருக்கின்றன. ஆனால், அப்பகுதி முழுமையாக பழங்குடியின மக்களும், ஆதி திராவிட மக்களும் வசிக்கக்கூடிய பகுதி. அப்பகுதியில் இயங்கிவரும் சுகாதார நிலையத்திற்கு தினமும் 200 புற நோயாளிகள் வந்து செல்லக்கூடிய நிலை உள்ளது. அந்த மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக உருவாக்கித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜூன் 5]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்குவதைப் போலவே, ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி வருகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் 190 கோடி ரூபாய் செலவில் 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட புதிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. தற்பொழுது, நோயாளிகளுடைய எண்ணிக்கைக்கேற்பவும், தேவையின் அடிப்படையிலும் கருத்துருக்கள் பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மலைப் பகுதியை சார்ந்திருக்கக்கூடிய குன்னூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவோடு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்தல்

***16402—திரு. கு.க. செல்வம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, 110–வது வட்டம், நுங்கம்பாக்கம் பகுதியில் உள்ள வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜூ, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

> *“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்*
> *தெய்வத்துள் வைக்கப் படும்”*

என்கின்ற தெய்வப் புலவன் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, இந்த